த. நா.ச.பே. எண் : 024 நாள் : 06.06.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (6.6.2018) சட்டப்பேரவையில், நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாக தற்கொலை செய்து கொண்ட செல்வி பிரதீபா குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து உரையாற்றினார்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், பெருவளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகள் செல்வி பிரதீபா என்பவர் நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாக மனமுடைந்த நிலையில், **4.6.2018** அன்று இரவு தற்கொலை செய்து கொண்டு உயிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

உயிரிழந்த செல்வி பிரதீபா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிரிழந்த செல்வி பிரதீபா அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிருந்து 7 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாணவர்களின் நலனில் எப்போதும் அக்கறையோடும், அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருக்கும் என்பதையும், மாணவ மணிகள் இதுபோன்ற விபரீத முடிவுகளை தவிர்க்க வேண்டும் என்பதையும் இத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**